This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# தப்பித்தால் தப்பில்லை!

பாலகிருஷ்ணனைப் பாருங்கள். ஐந்தடி நாலங்குலம் உயரம். மெலிதான கரங்கள். தூரத்திலிருந்து பார்த்தால் பையன்போல இருப்பான். சன்னமாக குரல், சாது, பிறர் வம்புக்குப் போகமாட்டான். தனக்குள் பேசிக்கொள்வான். தெருவில் கூட்டத்தைப் பார்த்தால் கிட்டத்தில் போய் விசாரிக்க மாட்டான். ஒதுங்கிப் போவான். அல்லது வேறு வழியில் போவான். அனாவசியமாக ஈ எறும்பைக்கூட கொல்லமாட்டான்.

## சாரதாவைக் கொல்லப் போகிறான்!

தன்னுடைய சிறிய அளவை ஈடுகட்டும் விதத்தில் பாலகிருஷ்ணன் நன்றாகவே படித்தான். இரண்டு மூன்றாவது 'ராங்க்'குக்குக் குறைவாக வாங்கியதே இல்லை. தக்க சமயத்தில் படித்து, பாஸ் பண்ணி, வேலைக்கு மனுப்போட்டு, இரண்டு மூன்று வேலை கிடைத்து, மனசுக்குப் பிடித்தமான வேலையில் அமர்ந்து, அப்பா அம்மா சொன்ன பெண்களையெல்லாம் விசுவாசமாகப் பார்த்து, சாரதாவைப் பிடித்துப் போய், கல்யாணம் பண்ணிக்கொண்டு, தேனிலவு சென்று திரும்பி வந்து, வீடு அமைத்து, பொருட்கள் சேர்த்து, இல்லறம் அமைத்து மூன்று வருஷம் கழித்து சிக்கல்!

## காட்சி

பாலகிருஷ்ணன் அலுவலகத்திலிருந்து திரும்பி வருகிறான். வீடு பூட்டி சாவி எதிர் வீட்டில். சாரதா எங்கே போயிருக்கிறாள் என்று தெரியவில்லை. ராத்திரி பத்தரை வரை காத்திருந்துவிட்டு யாரிடம் சொல்லலாம் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது வருகிறாள். ஸ்லீவ்லஸ் அணிந்து பாடிக்கொண்டே வருகிறாள்.

"எங்க போயிருந்த சாரதா? சொல்லிட்டுப் போயிருக்கலாமில்ல?"

"ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்குப் போயிருந்தேன். எதிர் வீட்டில சொல்லிட்டுத்தானே போயிருந்தேன்?"

"எந்த பிரண்ட்?"

"பேர் சொன்னால் உங்களுக்குத் தெரியாது!"

"சொல்லேன்."

"சுப்பலக்ஷ்மி, தெரியுமா?"

"தெரியாது."